**பேருவளை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 01 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேருவளை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து பயிலுனர் படியாக மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டிய ரூபா 183,285 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமையின் காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய படிகள் என்பன அதே அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபைக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 2,072,096 தொகையான மூலதன மானியத் தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியின் போது பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலுத்த வேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 189,678 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

பிரதான நடைமுறைக் கணக்கிலிருந்து பெறப்பட்டிருந்த மேலதிகப்பற்று வசதிக்காக சபைக்குச் சொந்தமான ரூபா 575,000 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பிணையாக வைக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 268,077,598 தொகையான 11 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பிடும்

போது நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காண்பித்தல் ரூபா 182,538,560 தொகையும், குறைத்துக் காண்பித்தல் ரூபா 18,196,728 தொகையும் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீதி உறுதிப்படுத்தல் கடிதம், நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, விரிவான பட்டோலைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 152,563,001 கூட்டுத்தொகையான 7 கணக்கு விடயங்களைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியின் போது காணப்பட்ட ரூபா 6,320,805 தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்பு மீதியில் 05 வருடங்களை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 272,931 ஆக இருந்ததுடன் இது தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற வீதி விளக்கு பராமரிப்பிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 6,351,534 மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

(i) நிதிப்பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் எந்தவொரு பணிக்காகவும் வழங்கப்படுகின்ற முற்பணம் அந்த செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட ரூபா 425,880 தொகையான முற்பணம் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 10 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களை விஞ்சிய ரூபா 1,692,901 தொகையான 17 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றறிக்கை

2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் தனியான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,418,071 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,377,302 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் உரிய நிதிக்கட்டுப்பாடொன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டமையின் காரணமாக 2015 திசெம்பர் 31 இல் உளள்ளவாறு சபையின் 2757387 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் ரூபா 4,775,585 மேலதிப்பற்று காணப்பட்டதுடன் அதற்காக சபையினால் மீளாய்வாண்டில் ரூபா 21,655 மேலதிகப் பற்று வட்டியொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 நிலுவை வருமானம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 15,435,899 தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 ஆதனவரி

(அ) 2014 ஆம் ஆண்டும் அதற்கு முன்னிருந்தும் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஆதனவரி மீதி ரூபா 12,733,368 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிலுவை மீதியில் ரூபா 9,224,376 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ஆதன வரியாக ரூபா 8,147,937 பற்றுச்சீட்டிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,561,586 தொகை ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.3 கடை வாடகை

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 1,829,330 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,283,505 தொகை அறவிட வேண்டியிருந்தது.

#### 2.3.4 கைத்தொழில் வரி

2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவைக் கைத்தொழில் வரி மீதியான ரூபா 14,999 தொகையை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 61,448,668 தொகையொன்று கீழே குறிப்பிட்ட பிரகாரம் கிடைக்க வேண்டியிருந்தது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 25,297,329 |
| முத்திரைக் கட்டணம் | 36,151,339 |

## 2.3.6 காணி விற்பனை அடிப்படையிலான வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தின் காணி ஏல விற்பனையின் போது ஏலவிற்பனை செய்யப்படுகின்ற காணிகளின் விற்பனை விலையில் ஒரு சதவீத வருமானமொன்று சபையினால் அறவிட வேண்டியிருந்தது. சபையின் வருமானக் கட்டுப்பாட்டாளரினால் தயாரிக்கப்பட்ட அண்ணளவான மதிப்பீட்டில் ஒரு சதவீதத் தொகையான ரூபா 212,980 தொகை 64 காணி விற்பனைகளிலிருந்து 2015 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் அண்ணளவான மதிப்பீட்டிற்கும் சந்தை விற்பனை பெறுமதிக்கும் இடையேயான வேறுபாட்டை சீராக்கி மிகுதிப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3.7 விளம்பர அறிவித்தல்களுக்கான கட்டணம்

பேருவளை பிரதேச சபையின் 2014 நவம்பர் 14 ஆந் திகதிய 1889 ஆம் இலக்க 2015 ஆம் ஆண்டிற்குரிய விளம்பர அறிவித்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேச சபை எல்லைக்குள் விளம்பர அறிவித்தல்களை நிர்மாணித்தல் மற்றும் காட்சிப்படுத்தலுக்காக பட்டோலையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 ஒக்தோபர் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி கட்டணம் அறவிட வேண்டியின் படி கட்டணம் அறவிட வேண்டிய விளம்பர அறிவித்தல்கள் / 37 பெயர்ப் பலகைகளுக்காக உரிய கட்டணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்கு கிடைக்காதுபோயிருந்த வருமானம் ரூபா 117,775 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் பேணப்படுகின்ற நூலகங்களில் புத்தகங்கள் வெளியே வழங்கப்படும் பிரிவில் அங்கத்தவர்களினால் எடுத்துச் செல்லப்பட்டு மீண்டும் கையளிக்கப்படாத 426 புத்தகங்களின் பெறுமதி ரூபா 57,189 ஆக இருந்ததுடன் சபையினால் அந்தப் புத்தகங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அவற்றின் பெறுமதியை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அளுத்கம மற்றும் பயாகல நூலகங்களில் முறையே 1357 புத்தகங்கள் மற்றும் 109 புத்தகங்கள் என்பவற்றின் பெறுமதி ரூபா 40,045 மற்றும் ரூபா 15,120 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 55,165 பெறுமதியுடைய புத்தகங்கள் காணாமல் போயிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபை அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டின் போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சிலிருந்து சபைக்குக் கிடைக்கப் பெற்ற Belvan (பெல்வான்) வகையின் உழவு இயந்திரத்தை பதிவு செய்யாமல் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 விளைவற்ற சொத்துக்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,999,850 பெறுமதியான தார் சூடாக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான டபள்கெப் வண்டியொன்று, கை உழவு இயந்திரம் ஒன்று முச்சகர வண்டியொன்று மற்றும் ஜே.சீ.பீ இயந்திரமொன்று என்பன எந்த பழுதுபார்த்தலோ அல்லது பயன்படுத்தலோ இன்றி காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) சபைக்குச் சொந்தமான 30 கடைகள் வாடகைக்கு வழங்கப்படாமல் எந்தவித வருமான உழைப்பும் இன்றி 15 வருடங்கள் அளவிலான காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்